1973 நவம்பர் 21]

கட்டணத்தின் மூலமாகவும் கிடைக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டது போல், பராமரிப்பது, இன்னும் மற்ற வகைகளில் அந்தச் செயற் குழுவைச் சேர்ந்தவர்கள் கவனிக்க முடியுமா என்பதை ஆராய்ந்து, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களையும் கலந்து அதை ஒரு துணை தொல் பொருள் ஆய்வுக் கூடமாக அமைக்கலாமா என்ற கருத்து இருந்து வருகிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களைக் கலந்து முடிவு எடுக்க முயற்சிக்கப்படும்.

College Text Books for Libraries

*9 *Q*.—THIRU C. V. RAJAGOPAL (on behalf of THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR): Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that College Text-Books have been purchased for the libraries of the Government High Schools; and

(*b*) if so, the reason for the same?

நூல நிலையங்களுக்குக் கல்லூரிப் பாடத் தரமுள்ள நூல்கள்.

திரு. சி. வி. ராஜகோபால் (தவத்திரு குன்றக்குடி அடிகளார் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரசு உயர்நிலைப் பள்ளி நூலகங்களுக்குக் கல்லூரிப் பாட நூல்கள் வாங்கப் பெற்றிருக்கின்றன என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், காரணம் யாது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) & (இ) உயர்நிலைப் பள்ளிகளில் அமைந்துள்ள நூல் நிலையங்களுக்கென 1972-73-ல் சுமார் ரூ. 1 லட்சம் மதிப்புள்ள தமிழ் நூல்கள் அரசுச் செலவில் சுமார் 200 பள்ளிகளுக்கு வழங்கப்பட்டன. அவைகள் கல்லூரிப் பாடத் தரமுடையனவாய் இருப்பினும், உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களும் மாணவர்களும் பயன்படுத்தித் தம் தகுதியையும் பொது அறிவையும் வளர்த்துக் கொள்ள உதவுவனவேயாகும்.

Age of Retirement of Teachers

*10 *Q*.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that the Government of India have suggested in their letter No. F1-5/67 ESE-6, that the age of retirement of teachers, who have received National Awards may be extended by five years subject to their being found physically and mentally fit;

(b) if so, the action proposed to be taken thereon;

(c) whether there is any proposal to extend the services of teachers who have received State Awards at least by two years; and

(d) if not, the reasons therefor?

ஆசிரியர்களின் ஓய்வு பெறும் வயது

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தேசிய விருது பெற்ற ஆசிரியர்கள், உடல் நலமும், மன நலமும் உடையவர்களாக இருக்கக் காணப்படின், அவர்கள் ஓய்வு பெறும் வயதை மேலும் ஐந்தாண்டுக் காலத்திற்கு நீட்டிக்கலாம் என்று இந்திய அரசு எப்.1-5/67, ESE 6 ஆம் எண்ணுள்ள தமது கடிதத்தில் கருத்து தெரிவித் துள்ளது என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதன் மேல் எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை யாது?

(உ) மாநில விருது பெற்ற ஆசிரியர்களின் பணிகளைக் குறைந்தது மேலும் இரண்டாண்டுகளுக்காயினும் நீட்டிக்கும் செயற்குறிப்பு உண்டா?

(எ) இல்லையெனில், அதற்குக் காரணம் என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) ஓய்வு பெறும் வயதை உயர்த்தத் தேவையில்லை என்று தீர்மானிக் கப்பட்டது.

(உ) இக்கேள்விக்கு இடமில்லை.

(எ) பயிற்சி பெற்ற ஆசிரியர்களிடையேயே இன்னும் வேலையில்லாத திண்டாட்டம் இருப்பதால், இதை ஏற்றுக்கொள்ளவில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, இந்த தேசிய விருது பெற்ற ஆசிரியர்கள் மிகவும் குறைவானவர்களாகத்தான் இருப்பார்கள். அதுவும் மத்திய அரசாங்கம் கடிதம் எழுதியிருப்பதாகவும் கூறப்பட்டது. அவர் களுடைய அறிவும், ஆற்றலும், அனுபவமும் கல்வித் துறைக்குப் பயன்பட வேண்டும் என்ற கருத்தில்தான் சொல்லப்பட்டது என்று கருதுகிறேன். ஆகவே அந்த முறையில், அவர்கள் சிறிய அளவில் இருப்பதால், விருது பெற்ற ஆசிரி யர்களுக்கு மட்டும் ஐந்து ஆண்டு பதவிக் காலம் நீடிக்கும் என்ற எண்ணம் ஏற்பட்டால், இன்னும் பல ஆசிரியர்கள் நல்ல பணி புரிய வாய்ப்பு ஏற்படும். இதை மனதில் கொண்டு அரசு அவர்களுக்கு அந்த வாய்ப்பைக் கொடுக்க முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

1973 நவம்பர் 21]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, விருது அளிப்பது என்பதே அந்த ஆசிரியர்களுடைய ஆற்றலைப் பாராட்டுவதற்காகத் தான். மத்திய அரசாங்கம் அப்படி ஒரு யோசனையைத் தெரிவித்திருந்தது. ஆனால் அவர்களை மேலும் ஐந்து ஆண்டுக்காலம் பதவியில் இருக்க அனுமதித்தால், சில நன்மைகள் ஏற்படும் என்பதோடு, தவறுதல்களும் ஏற்பட்டுவிடும். விருது பெற்ற ஆசிரியர்களுக்கு மேற்கொண்டு ஐந்து ஆண்டுக் காலம் எப்படியும் கிடைத்துவிடும் என்ற எண்ணத்தில், 'பிரஷர்' போன்றவை இருக்கும். அந்த நிலையைப் பெறுவதற்காக ஒவ்வொருவரும் முயற்சிப்பார்கள். அதிலே ஏற்படுகின்ற கேடுபாடுகளைத் தவிர்க்க முடியாது. அவர்களிடையே நல்லெண்ணம் வளர முடியாமல் போய்விடும். அவர்களை வேறு வகைகளில் பாராட்டலாம். அவர்களை மேற்கொண்டு பதவியில் வைப்பதால் பல சங்கடங்கள் ஏற்படும் என்று கருதுவதால், மாநில அரசு அந்த யோசனையை ஏற்றுக்கொள்ளவில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, மற்ற வகைகளில் பாராட்டலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியானால் அரசாங்கத்தால் வெளியிடப்படுகின்ற பாடப் புத்தகங்களை ஆராய்வதற்கு விசேஷக் குழு இருந்தால், அவைகளிலே இந்த விருது பெற்ற ஆசிரியர்களைப் போட்டு அவர்களுடைய ஆலோசனையைப் பெறலாம். இம்மாதிரியான ஆலோசனை அரசாங்கத்திடம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, எந்தெந்த வகைகளிலே எல்லாம் அவர்களைப் பயன்படுத்திக்கொள்ள முடியுமோ அந்தந்த வகைகளில் பயன்படுத்திக் கொள்ளப்படும். புதிய பாடத் திட்டங்கள்படி பாடநூல்கள் எழுதுவது, புதிய பாடத் திட்டங்களை உருவாக்குவது போன்ற பணிகளுக்கு விருது பெற்ற ஆசிரியர்கள் பயன்படுத்திக்கொள்ளப்படுவார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

Treatment of Chest Diseases

* 11 *Q.*—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether it is a fact that some of the latest apparatuses necessary for the treatment of chest diseases are not available at the Special Chest Clinic, Stanley Hospital, Madras; and

(*b*) if so, the action proposed to be taken by the Government in the matter?